## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் - 2013

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு மற்றும் 108 மற்றும் 111 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு மேற்கொள்ளப்படுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்ளப்பட்ட போதும், பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும், பரப்பினையும், நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

நியமங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன.

**(அ) நியம இலக்கம் 01**

திரட்டிய மிகை அல்லது பற்றாக்குறை என்பன ஒதுக்கங்களிலிருந்து வேறாகக் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு வகைப்படுத்தாமல் முன்னைய ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட பொது ஒதுக்கக் கணக்கின் ஆரம்ப மீதிக்கு மீளாய்வாண்டின் பற்றாக்குறை இணக்கம் செய்யப்பட்டு திரட்டிய பற்றாக்குறையாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நியம இலக்கம் 02**

மீளாய்வாண்டில் நிதி வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சல் என்பவற்றை பிரதிபலிக்கும் வகையில் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அது தொடர்பாக பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தொழிற்படு மூலதன அசைவில் உள்ளடக்கப்பட்ட இருப்பில் ரூபா 486,969 தொகையான நிதி வெளிப்பாய்ச்சல் ரூபா 11,639,385 ஆகவும் ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் ரூபா 3,126,106 தொகையான நிதி உட்பாய்ச்சல் ரூபா 8,026,310 நிதி வெளிப் பாய்ச்சலாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ii) நிறுத்தி வைக்கப்பட்ட நிதியம் (Restricted funds) தொடர்பாக நிதி உட்பாய்ச்சலைக் கணக்கிடும் போது அதற்குரிய சீராக்கல் செய்யப்படாமையால் உள்ளவாறான காசுப்பாய்ச்சல் கூற்று ரூபா 4,015,640 ஆல் வேறுபட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் இருப்புக்கள் புத்தகப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அத்திகதியிலான இருப்பு மெய்மையாய்வு அறிக்கைப் பெறுமதி மற்றும் புத்தகப் பெறுமதிக்கு இடையே ரூபா 1,383,912 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) ரூபா 6,220,301 தேறிய பெறுமதியான நீர் பவுசரொன்று விபத்தினால் மீளப் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வகையில் சேதமடைந்திருந்ததுடன், அதற்காக முழுமையான சேத அடிப்படையில் காப்புறுதி உரித்து கோரப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் சொத்தின் பெறுமதி நடைமுறையல்லாத சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சேதம் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபத்திற்குட்பட்ட சொத்திற்காக ரூபா 5,850,000 தொகையான இழப்பீட்டினை வழங்குவதற்கு காப்புறுதிக் கம்பனி இணக்கம் தெரிவித்துள்ளதாக 2014 மார்ச் மாதத்தின் போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

(இ) பெறுமானத்தேய்வை மதிப்பிடுவதற்கு அடிப்படையாகக் கொண்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அந்நிலையான சொத்துக்களின் பெறுமதி என்பவற்றிற்கு இடையே ரூபா 202,012,681 ஆன வேறுபாடு காணப்பட்டது. அதனால் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த ஆண்டின் பெறுமானத் தேய்வு ரூபா 168,701,356 அளவினால் சரியானதன்மை சிக்கல் நிறைந்ததாக இருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 2003 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் கடன்பட்டோர் மீதி | 105,525 | விரிவான பட்டோலைகள் |
| (ஆ) | 32 வெவ்வேறு நிதிய மீதிகள் | 33,789,243 | விடயக் கோவைகள், நிதியத்தின் நோக்கம் மற்றும் பணிகள் |

### 2.2.4 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்திலிருந்து 2012 ஒக்தோபர் மாதம் வரையான காலப்பகுதிக்காக பல்கலைக்கழகத்திற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை சேவையில் ஈடுபடுத்தாமையால் தேவையான கழிப்பனவுகளை மேற்கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் உயர்கல்வி அமைச்சு செயலாளரின் எழுத்துமூல வேண்டுகோளின் பிரகாரம் கழித்துக்கொள்ளப்பட்ட ரூபா 9,432,774 தொகை உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக மீண்டும் பாதுகாப்பு சேவைக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.5 கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவீடுகள் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்த ரூபா 1,044,884 ஆன கிடைக்க வேண்டிய 25 ஊழியர் கடன் மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 403,261 ஆக இருந்தது.

(ஆ) ரூபா 57,058,489 கூட்டுத்தொகையான கேள்வி வைப்புக்கள், நிறுத்தி வைத்த தொகைகள் மற்றும் 263 கேள்வி பிணைப் பாதுகாப்பு மீதிகள் என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அம்மீதிகளில் ரூபா 7,969,999 தொகையான 173 கடன்மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேல் பழமையாக இருந்ததுடன், ரூபா 49,088,490 ஆன 90 மீதிகள் 01 ஆண்டிற்கும் 4 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலவீச்சினைக் கொண்டிருந்தது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | ரூபா 123,692,743 பெறுமதியான கணனி உபகரணங்கள் தொடர்பாக ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 10 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2012 பெப்ரவரி 16 ஆம் திகதிய 156 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தி மற்றும் 2012 மார்ச் 26 ஆம் திகதிய 03/2012 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையற்ற நானாவித செலவினங்கள் குறைக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் தினக் குறிப்பேடுகள் அச்சீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 185 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், இதனால் ரூபா 323,062 கூடுதலாக செலவிடுவதற்கு நேர்ந்திருந்தது. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் பற்றாக்குறை ரூபா 214,560,331 ஆகவும் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 96,632,029 ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 117,928,302 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தன. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில்

அரசின் பங்களிப்பு ரூபா 71,778,445 ஆலும், ஏனைய வருமானம் ரூபா 9,673,408 ஆலும் அதிகரித்திருந்த போதும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள், ஏனைய மீண்டுவரும் செலவினங்கள், வழங்கல் மற்றும் நுகர்வு மற்றும் பராமரிப்புச் செலவினங்களுக்காக முன்னைய ஆண்டினை விட ரூபா 60,640,848 ஆல் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது 3359 மாணவர்களின் கல்விக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 724,914,540 ஆக இருந்ததுடன், ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 215,813 ஆக இருந்தது. முன்னைய ஆண்டில் 3167 மாணவர்களின் கல்விக் கிரயம் ரூபா 575,946,435 ஆக இருந்ததுடன், ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 181,859 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ஒரு மாணவருக்கான கிரயம் ரூபா 33,954 ஆல் அதிகரித்திருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

ரூபா 82,453,399 பெறுமதியான காணி பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட போதிலும், சட்டரீதியாக அதன் உரித்தைப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தால் ரூபா 6,000,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மோட்டர் வண்டியொன்று நிலையான சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மோட்டார் வாகன பதிவுச் சான்றிதழில் அதன் உரித்து வெளிநபரொருவருக்கு சொந்தமாக இருந்தது. அத்தோடு அது கொள்வனவு செய்வதற்கு ஒரு நாளைக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டிருந்தமை வழங்குனரின் பற்றுச்சீட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) பல்கலைக்கழகத்திற்குப் பொறுப்பேற்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 119,284,110 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் என்பன பல்கலைக்கழகத்தின் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பின்னர் பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

### 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 7,926 சதுர அடி பரப்பளவிலான 06 கட்டிடங்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 யூன் மாதம் வரையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(ஆ) ரூபா 388,164 பெறுமதியான இயந்திரமொன்று 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 யூன் மாதம் வரையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

**4.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் விளையாட்டரங்கிற்கு அருகில் உள்ள வீதியின் 1751 சதுர அடியில் பாதாசாரிகள் வழியை விஸ்தரிப்பதற்காக ரூபா 376,256 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்குரித்தாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) உள்ளக பிணைப்புக் கற்களை (Interlocking Pavement Blocks) முறையாகப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 83,612 கிரயத்திலான 400 சதுர அடிக்கு அண்மித்த அளவு கீழிறங்கியிருந்ததுடன், பாதசாரி செல்லுமிட மேற்புறத்திற்கு (Sholders) போடப்பட்டிருந்த கருங்கல் தூள் மற்றும் மணல் கலவையுடனான சீமெந்து உள்ளக பிணைப்புக் கற்களுடன் நன்றாக இணைக்கப்படாமையால் அம்மேற்பரப்பு கற்களிலிருந்து வேறாக தள்ளிக் காணப்பட்டது.

(ii) விலை மனுவை கோருவதற்கு முன்னர் வேலைப் பொறியியலாளரால் தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட தினத்திற்கு 03 நாட்களுக்கு முன்னர் ஒப்பந்தகாரர் ஒருவரால் கூறுவிலை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 3,882,094 தொகையான விளையாட்டரங்கிற்கு அருகில் காபட் வீதியின் பாதுகாப்பு கருதி ஓரச்சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 3,253,182 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(i) மண் பயன்பாட்டிற்கு எடுக்க முன்னர் குவித்து அளவீடுகள் எடுக்கப்படாமையால் 852.08 கன மீற்றர் மண்ணிற்கு செலுத்தப்பட்ட ரூபா 1,108,640 தொகையின் சரியானதன்மை சர்ச்சைக்குரியதாக இருந்தது. அவ்வாறே தரத்தை விட குறைந்த மண்ணைப் பயன்படுத்தி உறுதியாக்கும் வகையில் மட்டப்படுத்தப்படவில்லையென வேலைப் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையால் செலவிடப்பட்ட அத்தொகை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலாக இருந்தது.

(ii) சுவர் பொறியியலாளர் திட்டத்தின் பிரகாரம் உரிய தரத்திற்கு ஏற்ப நிர்மாணிக்காமை மற்றும் நிர்மாணங்களில் காணப்பட்ட குறைபாடு என்பன காரணமாக ரூபா 18.01 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட காபட் வீதிக்கு அது பாதகமான முறையில் தாக்கம் செலுத்தியிருந்தது.

**4.6 நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

அமைச்சரவையால் 2005 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது முறையே தகவல் தொழிநுட்ப கட்டிடமொன்றையும் நிர்வாகக் கட்டிடமொன்றையும் நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2014 ஆகஸ்ட் மாதம் வரையில் அவ்வாறான கட்டிடங்களின் நிர்மாணம் எதுவும் ஆரம்பிக்கப்படாதிருந்த போதிலும், மதியுரைச் சேவைக்காக ரூபா 3,314,508 செலவிடப்பட்டிருந்தது.

**4.7 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினுள் தரவுத் தளமொன்றை (Data base) உருவாக்கி செயற்படுத்துவதற்கான பணிப்பொறுப்பு 2012 மே மாதத்திலிருந்து 06 மாதங்களுக்கு உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு நிறைவேற்றப்படாததன் காரணமாக அதற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 150,000 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

(ஆ) இளைப்பாறிய சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 45,000 கொடுப்பனவொன்றும் அதற்கு மேலதிகமாக மாதாந்தம் ரூபா 400 இற்கு வாடகை வீடொன்றும் வழங்கப்பட்டு வெளிவாரிப் பிரிவின் உதவி பதிவாளர் பதவியில் கடமை புரிவதற்காக பணிப்பொறுப்பு அடிப்படையில் நியமனமொன்று வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதத்திலிருந்து இந்நியமனம் வழங்கப்பட்டிருந்த போதிலும், செப்தம்பர் மாதம் வேலையைப் பொறுப்பேற்றிருந்தமையால் கடமையில் ஈடுபடாது 58 நாட்களுக்காக அண்ணளவாகச் செலுத்தப்பட்ட ரூபா 87,000 தொகை பயனற்ற செலவினமாக இருந்தது.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 மே 28 ஆம் திகதியில் உள்ளவாறு பதவிகளின் வெற்றிடங்கள் 102 ஆக இருந்ததுடன், அதில் நிதியாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் 02 பீடங்களுக்கான 03 பேராசிரியர் ஆகிய பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2012 ஒக்தோபர் 10 ஆம் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், பதவிகளின் வெற்றிடங்களை விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாக காணப்படும் அடிப்படைச் சம்பளம் ரூபா 26,020 ஆன உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல்) பதவிக்கு நிரந்தர நியமனமொன்றை வழங்காமல் பணிப்பொறுப்பு அடிப்படையில் அச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்காக மாதமொன்றுக்கு ரூபா 70,000 வீதம் செலுத்தப்பட்டு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அப்படிகளுக்கு மேலதிகமாக தொலைபேசி மற்றும் விடுதி வசதிகள் என்பவற்றிற்கு அறவீடுகளை மேற்கொள்ளாமல் வழங்குவதற்கு கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்திருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய நான்கு ஆண்டுகளின் நிதி விளைவுகள் தொடர்பான மீளாய்வொன்றை 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு தயாரித்த கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கியிருக்கவில்லை. அத்தோடு நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதிசார் பெறுமதிகள் காண்பிக்கப்படாதிருந்தமையால் வருடாந்த செயன் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு முடியுமான வகையில் கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்**

வருடாந்தம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன், 2011 – 2015 வரை 05 ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டமொன்று கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**5.3 கணக்காய்வு மற்றும் முகாமைக் குழு**

2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 03 கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

வருமான செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 24 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், அது 130 சதவீதமாக இருந்தது. அவ்வாறே மூலதனச் செலவினமாக பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 30 சதவீதம் அல்லது ரூபா 121 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்ததுடன், 03 செலவின விடயங்களுக்காக ஒதுக்கபட்டிருந்த ஏற்பாடுகளை விஞ்சி ரூபா 96 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பாதீடு சிறந்த நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5.5 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

2012 ஒக்தோபர் 10 மற்றும் நவம்பர் 06 ஆம் திகதிகளில் நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவால் வழங்கப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றுவதின் நிலைமை பின்வருமாறாக இருந்தது.

(அ) சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர் ஒருவருக்கு எதிராக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கும் பெண் தொழிலாளர் ஒருவருக்காக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்கு முன்னாள் பதிவாளர் தவறியிருந்த காரணத்தினால் ரூபா 941,836 தொகை இழப்பீடாக செலுத்துவதற்கு நேர்ந்தமை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழிற்சங்க கூட்டமொன்றில் பங்குபற்றுவதற்காக பெற்றுக்கொண்ட பஸ் வண்டிக்காக ரூபா 139,000 கட்டணம் பல்கலைக்கழகத்தின் ஊழியர்களின் தனிப்பட்ட பெயர்களுக்கு செலுத்தியிருந்தமை மோசடியாக இருந்தமையால் அதற்குரித்தான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உத்தேச தகவல் தொழிநுட்ப கட்டிடத்திற்கு மதியுரை சேவைக்காக வழங்கிய ரூபா 1,321,189 தொகையான கொடுப்பனவு சர்ச்சைக்குரியதாக இருந்தமையால் தீர்ப்பதற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன், தீர்க்கப்படல் முடிவடையாதிருந்தமையால் கட்டிட நிர்மாணம் பின்போடப்பட்டிருந்தது.

(ஈ) சம்பளமற்ற விடுமுறை அடிப்படையில் வெளிநாடு சென்று பின்னர் சேவையிலிருந்து விலகியிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,993,082 கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பணிவார்த்த கலை மண்டப நிர்மாண ஒப்பந்தம் பாதுகாப்பு பிணைமுறியொன்று இல்லாமல் வழங்கப்பட்டு பின்னர் பல்கலைக்கழகத்தினால் அவ்வொப்பந்தம் செல்லுபடியற்றதாக்கப்பட்டமையால் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,008,816 தொகை ஒப்பந்தகாரருக்குச் செலுத்த வேண்டிய தொகையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் கணக்காய்வு விசாரணைகளின் மூலம் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) ஊழியர் முகாமைத்துவம்
(ஈ) கூட்டுத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்